10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 156 வெள்ளிக்கிழமை ஒக்ரோபர் 27 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

18 வருடங்களின் பின்
அரசியல் கைதி விடுதலை

கொழும்பு, ஒக்.27

பதினெட்டு வருடங்களின் பின்னர் தமிழ் அரசியல் கைதி ஒருவர் கொழும்பு மேல் நீதி மன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட் டுள்ளார்.

கனகரத்னம் ஜீவரட்ணம் எனும் குறித்த அரசியல் கைதியே "குற்றவாளி இல்லை" என நீதிபதியினால் குறிப்பிடப்பட்டு 06

முல்லைத்தீவில் படைக் குவிப்பு

ரவிகரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.27

"முல்லைத்தீவில் இரண்டு பொதுமக்களுக்கு ஒரு சிப்பாய் எனும் வீதத்தில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. எனினும் அங்கு குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன" என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன்குற்றம்சாட்டியுள்ளார். நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் 108ஆவது அமர்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"முல்லைத்தீவில் தற்போது 60 ஆயிரம் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இது முல்லைத்தீவின் மொத்த சனத்தொகையில் 2 பொதுமகனுக்கு ஒரு சிப்பாய் எனும் வீதமாகும். அதேபோல் பெருமளவு பொலிஸா 06

யாழ்ப்பாணத்தில் டெங்கு தீவிரம்!

சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.27

"வடமாகாணத்தில் கிளி நொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் வெகுவாக குறைந்துள்ளது. அதே சமயம் யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன் இன்னொரு 06

இன்னும் பிடிபடாத பிள்ளை பிடிகாரர்

வவுனியாவில் அச்சம்

வவுனியா, ஒக்.27

வவுனியாவில் சிறுமி ஒருவரை நடு இரவில் வீடு புகுந்து கடத்த முயற்சித்தவர்களை இரண்டு வாரங்களாகியும் பொலிஸார் கைது செய்யவில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கீரிசுட்டான் கிராமத்தைச் சேர்ந்த 10 வயது சிறுமியை கடந்த 12 ஆம் திகதி நள்ளிர வில் வீடு புகுந்து மர்ம நபர்கள் தூக்கிச் செல்ல முற்பட்டனர். 06

புதிய அரசியலமைப்பில் வடக்கு-கிழக்கை இணைக்க முயற்சி

கொழும்பு, ஒக்ரோபர் 27

"ஐ.நாவின் அழுத்தத்தின் காரணமாக, வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைக்கும் வகையில் புதிய அரசியலமைப்பை அரசாங்கம் உருவாக்க முனைகின்றது" என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

"அரசியலமைப்பை உருவாக்கும் செயற்பாட்டில் சர்வதேசத்துக்கு நேரடியான பங்களிப்பு உள்ளது. பப்லோ போன்றோரின் கருத்துகள் இதனையே உறுதிப்படுத்தியுள்ளன. இம்மாத இறுதியில் இடைக்கால அறிக்கை மீது மூன்றுநாள் விவாதம் நடைபெறவுள்ளது. ஆனால் இன்னமும் அரசியலமைப்புக்கான ஆரம்பக்கட்டத்தைக்கூடத் தாண்டவில்லை என அரசு கூறுவது முற்றிலும் பிழையானது. அரசியலமைப்புக்கான அத்திபாரமே இந்த இடைக்கால அறிக்கையாகும்.

ஒற்றையாட்சியை மாற்றியமைத்தல், 06

"சட்டம் படியுங்கள்"

மாகாண சபை உறுப்பினர்களுக்கு தவராசா ஆலோசனை

யாழ்ப்பாணம், ஒக்.27

"வடமாகாண சபை உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும், மாகாணச் சட்டங்கள் பற்றி சரிவரத் தெரியவில்லை. எனவே அவர்கள் முதலில் மாகாணச் சட்டங்களைக் கற்க வேண்டுமென ஆலோசனை கூறியுள்ளார் வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா.

நேற்றைய வடமாகாண சபையின் 06

வட்டுவாகலில் மறியல் போர்

முல்லைத்தீவு, ஒக்.27

முல்லைத்தீவு - வட்டுவாகல் கடற்படையினர் முகாம் வளாகத்திலுள்ள காணியில் மேற்கொள்ளப்படும் நிலஅளவீட்டு முயற்சியை கைவிடுமாறு கோரி, முல்லைத்தீவு - பரந்தன் வீதியை மறித்து பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட நிலங்களை அரச நிலஅள வீட்டு அதிகாரிகள் அளவீடு செய்யவுள்ளதாக பொதுமக்களுக்குத் தகவல் கிடைத்ததையடுத்து, அங்கு ஒன்று கூடிய பொதுமக்கள், குறித்த நில அளவீட்டு முயற்சியைக் கைவிடுமாறு கோரினர். பின்னர் வீதியை மறித்துப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டம் காரணமாக குறித்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது. இதனையடுத்து மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தொலை 06

"வீட்டுத் திட்டத்தில் அநீதி"

யாழ்.முஸ்லிம்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்கள் அரசினால் வழங்கப்படும் வீடமைப்பு விடயத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து யாழ்.மாவட்ட செயலக முன்றலில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர். யாழ்.முஸ்லிம் சமூகத்தினரின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணிவரை இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த வீட்டுத்திட்டத்தில் தமக்கு 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபாசம் காட்டிய மாமா கைது

திருகோணமலை, ஒக். 27

திருகோணமலை, ரொட்டவெவ பகுதியில் 16 வயதுடைய தனது மருமகளுக்கு ஆபாச வீடியோக்கள் காண்பித்த மாமன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். ரொட்டவெவ பகுதியில் உள்ள அம்மம்மாவின் வீட்டுக்கு வருகை தந்திருந்த போது, அவ்வீட்டிலுள்ள சிறார்கள் இருவருக்குமிடையில் சண்டை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, அவ்வீட்டுக்கு வருகை தந்த மாமனார், சண்டை பிடிக்க வேண்டாம் என்று கூறி, தாயார் இருக்குமிடத்துக்கு அழைத்துச் செல்கின்றேன் என சிறுமியை அழைத்துச்சென்று, அவரது வீட்டில் உறங்க வைத்து, ஆபாச வீடியோக்களைக் காண்பித்து, நேற்று காலை 5 மணியளவில் தயார் வீட்டுக்கு அனுப்பியுள்ளார் எனத் தெரியவருகின்றது. இந்த நேரத்தில் எங்கிருந்து வருகின்றாய் எனத் தாயார் வினவியபோதே இரவு நடந்த சம்பவங்களைச் சிறுமி கூறியதாகவும் அதனையடுத்து, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் தெரியவருகின்றது. (உஊ)

ஆற்றில் இருந்து குழந்தையின் சடலம் மீட்பு

டயகம கிழக்கு தோட்டத்தின் முதலாம் பிரிவில் ஆகுரோயா ஆற்றிலிருந்து 2 வயதுடைய பெண் குழந்தை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த குழந்தை தனது வீட்டுக்குப் பின்புறமாக உள்ள ஆற்றில் இருந்தே சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக டயகம பொலிஸார் தெரிவித்தனர். வீரதிருமகன் டிலுஷி என்ற 2 வயதுடைய பெண் குழந்தையின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்த குழந்தையின் சடலம் டயகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

தண்டவாளத்தில் 'கல்' வைத்த மாணவனுக்கு விளக்கமறியல்

மன்னார், ஒக். 27

தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பிரயாணிகளுடன் சென்ற தபால் சேவை புகையிரத்தை திசைத் திருப்பி அபாயத்தை ஏற்படுத்த முயன்றதாக தெரிவித்து பாடசாலை மாணவன் ஒருவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பேசாலை பகுதியில் செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவம் அன்று இரவு, தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட புகையிரதம், இரவு 9.45க்கு பேசாலை புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. அதன்போது புகையிரதம் ஓடும் சரியான பாதையை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும், அது பயனளிக்காதமையால் ரயில்வே அதிகாரிகள் ரயில்வே நிலையத்திலிருந்து 300 மீற்றர் தூரத்திலுள்ள தண்டவாளங்களை இணைக்கும் இடத்துக்குச் சென்று பார்த்துள்ளனர். அங்கு தண்டவாளங்களை இணைக்கும் இடைவெளியில் இரு பாராங்கற்கள் வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது கல்லினை வைத்த மாணவன் கைது செய்யப்பட்டார்.

மாணவனை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது எதிர்வரும் 02 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (உ)

நாடளாவிய செயலமர்வு

புதிய வருமானவரி சட்டம் தொடர்பாக வைத்தியர்கள், பொறியியலாளர்கள் கணக்காய்வாளர்கள் உள்ளிட்ட தொழிற் துறையினருக்கு தெளிவுபடுத்துவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நாடு முழுவதிலும் தொடர் செயலமர்வுகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக வரி அடிப்படையை விரிவுபடுத்துதல் மற்றும் வரி மூலமான வருமானத்தை அதிகரிப்பதே நோக்கமாகும் என்று தேசிய வருமான ஆணையாளர் நாயகம் ஐவன் திசாநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைவாக நாடுமுழுவதிலும் தொழிற்துறையினருக்கான சட்டம் குறித்து தெளிவுபடுத்தும் செயலமர்வுத் தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஐவன் திசாநாயக்க மேலும் குறிப்பிட்டார். (உ)

பெயர் நீக்கத்தால் ஹட்டனில் குழப்பம்

ஹட்டன், ஒக். 27

ஹட்டனில் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர் பலகையிலிருந்து தொண்டமானின் பெயர் இரு தினங்களுக்கு முன் நீக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஹட்டனில் இரு தினங்களாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது சில கடைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டுவருவதால் போக்குவரத்தும் அப்பகுதிகளில் முடங்கியுள்ளது. குறித்த செயலுக்கு கண்டனம் தெரிவித்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் பொலிஸாரின் தலையீட்டையடுத்து முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

எனினும் நேற்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள், விவசாயதுறை அமைச்சர் ரமேஷ்வரன், ஆதரவாளர்கள் உள்ளிட்டோர் பொது மக்களை இணைத்து ஹட்டன் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர். மீண்டும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையமாகவே இந்த நிலையம் தொடர்ந்தும் இயங்கும் என்ற உறுதிமொழி தரப்பட்டு தொண்டமான் பெயருடன் பெயர்ப்பலகை நாட்டப்படும்வரை போராட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர். (உ)

வவுனியா சிங்கள குடியேற்றங்களை மணலாற்றுடன் இணைக்க கோரிக்கை

வவுனியா, ஒக். 27

வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டுள்ள சிங்கள மக்கள் குடியிருக்கும் நான்கு வட்டாரங்களையும் மணலாறு (வெலிஓயா) பிரதேச சபையுடன் இணைக்குமாறு வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், வடமாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார். மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளூராட்சி மன்றங்களின் மீள் எல்லை நிர்ணயக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே அவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த சிங்கள குடியேற்றக் கிராமங்களான 17 கிராமங்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் நேரடியாக நிலத்தொடர்பு அற்றவையாகும். இந்தக் கிராமங்களை உள்ளடக்கியதான 04 வட்டாரங்கள் கடந்த உள்ளூராட்சி தேர்தலின்போது வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டிருந்தன. எனினும் இந்தக் கிராமங்களை சேர்ந்த மக்கள் தமது பிரதேச செயலக சேவைகளை மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலகத்திலிருந்தே பெற்று வந்தனர் எனவும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

வடக்கு மாகாணசபை முன் போராட்டம்

கோப்பாய், ஒக். 27

கோப்பாய் பிரதேசத்துக்கு உட்பட்ட அக்கரைப் பகுதியில் அமைக்கப்படும் சுற்றுலா மையத்தினை நிறுத்துமாறு வலியுறுத்தி அப்பகுதி மக்களால் வடமாகாண சபை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபையின் 108 ஆவது அமர்வு நேற்று நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், புத்தூர் பிரதேச அக்கரை கிராம மக்கள் ஒன்று கூடி தமது எதிர்ப்பினையும் கண்டனத்தினையும் வெளிப்படுத்தினார்கள்.

"வருமானத்தினை விட தமிழனுக்கு தன்மானம் தான் முக்கியம். தன்மானத்தை விற்று வரும் வருமானம் வேண்டாம்" என இதன்போது மக்கள் வலியுறுத்தியுள்ளார்கள். வடமாகாண சுற்றுலா அமைச்சர் முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் அக்கறைப் பகுதியில்

சுற்றுலா மையம் அமைத்து வருவதுடன், உல்லாச படகுச் சேவையினையும் நடத்தி வருகின்றனர்.

எனவே, சுற்றுலா மையத்தினை சிறுவர் பூங்காவாக மாற்றி அமைக்குமாறு வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தினை அவர்கள் முன்னெடுத்துள்ளனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli
வெள்ளி, 27 ஒக்ரோபர் 2017 ethirolijaffna@gmail.com

சிறையில் தொலையும் வாழ்வு

"நீங்கள் குற்றமற்றவர்" என்று கூறி, 18 வருடங்களின் பின்னர் தமிழ் அரசியல் கைதி ஒருவரை நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது. ஒருபுறம் இந்தச் செய்தி மகிழ்வைத் தந்தாலும், மறுபுறத்தில் அந்தக் கைதியின் 18 வருட வாழ்வை எந்தவித நியாயமுமின்றி சிறைவாழ்வு தின்றுவிட்டதே என்ற ஆதங்கமும் எழவே செய்யும்.

வாழ்வின் மிக முக்கியமான இளமைப் பருவத்தின் 18 வருடங்களையும் சிறையில் தொலைத்த அந்தக் கைதி, இப்போது வெளியுலகுக்கு வரும்போது, இழந்து விட்ட அந்த வாழ்வை மீளப்பெற முடியாது. எந்தக் குற்றமும் செய்யாத ஒருவரை, கேட்டுக் கேள்வியின்றி, விசாரணைகள் இன்றி 18 வருடங்கள் அடைத்து வைத்துவிட்டு, " உன்னில் ஒரு குற்றமும் இல்லை. நீ போகலாம்" என்று சொல்வது எந்தவித நியாயத்துக்குள் அடங்கும்.

ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சிறைகளில் அடைபட்டுள்ள பெரும்பாலான தமிழ் அரசியல் கைதிகள் இதேபோன்று, எவ்வித குற்றங்களும் செய்யாமலேயே கைது செய்யப்பட்டவர்கள். பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற பேரில், சந்தேகப்படும் எவரையும் கைது செய்து சிறையில் அடைக்கும் அதிகாரம் முப்படைகளுக்கும் இருந்தன. இதனால் பெரும்பாலான வழக்குகளை வேகமாக முடிப்பதற்கும், உயர் அதிகாரிகளிடம் நற்பெயரை வாங்கவும் படையினருக்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒரு அட்சயபாத்திரமாக இருந்தது.

இப்போதெல்லாம் மாதக் கடைசியில் வீதியில் போவோர் வருவோரைப் பிடித்து, ஏதாவது குற்றத்தை கண்டுபிடித்து, தண்டம் விதித்து, தங்கள் கணக்கில் காட்டும் போக்குவரத்துப் பொலிஸார் போலவே, போர் நடந்த காலத்தில் முப்படையினரும் தங்கள் நலன்களுக்காக அப்பாவித் தமிழ் இளைஞர்களை சகட்டுமேனிக்கு கைது செய்து சிறைகளை நிறைத்தனர்.

எதற்காகப் பிடிக்கப்பட்டோம் என்பதும் தெரியாமல், எப்போது விடுவிக்கப்படுவோம் என்பதும் தெரியாமல் ஏராளமான தமிழ் அரசியல் கைதிகள் பல வருடங்களாக சிறைகளில் வாடி வருகின்றனர். எத்தனை நாள் தான், நான்கு சுவர்களுக்குள் முடிவின்றி முடங்கிக் கிடக்க முடியும். அதனால் தங்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தி, என்ன குற்றம் செய்தோமோ அதற்குரிய தண்டனையையாவது தாருங்கள் என்று கோரி கைதிகள் அடிக்கடி போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். இந்தப் போராட்டங்களுக்கு அரசியல் தலைமைகள் அவ்வப்போது ஏதும் உறுதிமொழிகளை வழங்குவதும், பின்னர் அதை மறப்பதும் மரபாகவே போய் விட்டது.

ஆனால், விசாரணைகளோ தீர்ப்புகளோ இன்றி அரசியல் கைதிகள் இருண்ட சிறைகளுக்குள் அடைக்கப் பட்டபோது அங்கும் நிம்மதி கிடையாது. எப்போதெல்லாம் சிங்களச் சிறைகாவலர்களுக்கு கோபம் வருகிறதோ அப்போதெல்லாம் அவர்கள் அதை இந்தக் கைதிகளிடத்திலேயே காட்டுகிறார்கள். அப்படி சிறைக் காவலர்களின் தாக்குதலால் அரசியல் கைதிகள் மாண்டுபோன சம்பவங்களும் பல. ஒரு ஜனநாயக நாட்டில் தங்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கைதிகள் கோருவது அப்படியொன்றும் பாரதூரமான விடயமல்ல. தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமமானது. அதனையே நேற்று விடுவிக்கப்பட்ட அரசியல் கைதியின் கதை கூறுகிறது. அந்தக் கைதி விடுவிக்கப்பட்டாலும்கூட அவன் வாழ்வு தொலைந்து போய் விட்டது. சிறைப் பறவைகளாக இருக்கும் ஏனைய கைதிகளின் வாழ்வையும் சிதைக்காமல் அவர்களின் வழக்குகளையாவது உடனடியாக விசாரித்து நீதி வழங்க அரசு முன்வரவேண்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

நீதிமன்ற சிறையில் தாக்குதல் நால்வருக்கு விளக்கமறியல்

வவுனியா, ஒக்.27

வவுனியா நீதிமன்ற சிறைக்குள் வைத்து இளைஞன் மீது தாக்குதல் நடத்தியவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வவுனியாவில் இஸ்லாமிய பெண்ணொருவரை காதலித்து திருமணம் முடித்த இளைஞனை அப்பெண்ணின் குடும்பத்தார் தாக்கிய சம்பவம் அண்மையில் அப்பகுதியில் இடம்பெற்றிருந்தது. அத்துடன் இது தொடர்பில் நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டிருந்தது. குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், நீதிமன்றம் இளைஞனையும், அவர் மீது தாக்குதல் நடத்தியாதாகக் கூறப்படும் நால்வரையும் பிணையில் செல்ல அனுமதியளித்திருந்தது. எனினும் நீதிமன்றின் நேரம் முடிந்த வேளையில் மன்றின் சிறைக்குள் வைத்து குறித்த இளைஞன் மீது இஸ்லாமிய பெண்ணின் சகோதரர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது குறித்து நீதிபதியிடம் அறிவிக்கப்பட்ட பின்னர் தாக்குதல் நடத்திய நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தவிட்டுள்ளார். (உ)

50,000 வீட்டுத்திட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம், ஒக்.27

வடக்கு, கிழக்கில் நிர்மாணிக்கப்பட உள்ள 50,000 வீடுகளுக்கான திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 12 ஆயிரம் குடும்பங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன், சுமார் 800 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஏனைய 5 மாவட்டங்களுக்கும் உரிய முறையில் வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

அமிர்தாம்பிகை வித்தி. பரிசளிப்புவிழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.27

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று இடம் பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் ச.தர்மகுலசிங்கத்தின் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தப் பரிசளிப்புத் தின நிகழ்வில் தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.மனோரஞ்சிதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.அத்துடன் அதிதிகளாக கல்லூரியின் பழைய மாணவரும், வர்த்தகருமான வை.சிவராஜா, பழைய மாணவர் நா.குமரேசன்(லண்டன்), முன்னாள் ஓய்வு நிலை அதிபர் நா.அருட்சோதி, முன்னாள் அதிபர் கு.ரவீந்திரா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

கரைவலை இழுக்க உழவு இயந்திரம் வேண்டாம்

யாழ்ப்பாணம், ஒக்.27

வடக்கு கடலில் கரைவலை தொழில் செய்வோர் உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி தொழில் செய்வதனை கட்டுப்படுத்த வேண்டும் என வடமாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் எஸ்.சுகிர்தன் பிரேரணை ஒன்றை முன் மொழிந்துள்ளார். வடமாகாண சபையின் 108 ஆவது அமர்வு நேற்று கைதடியில் உள்ள பேரவைக் கட்டடத்தில் நடைபெற்றது. அதன் போது குறிப்பிட்ட அவர், வடக்கில் சுண்டிக்குளம் முதல் முல்லைத்தீவு வரையிலான கடற்பரப்பில், கரைவலை தொழில் செய்வோர் உழவு இயந்திரம் பயன்படுத்தி கரை வலை இழுப்பதனால் கடல் வளங்கள் பாதிக்கப்படுகின்றது. எனவே உழவு இயந்திரம் பயன்படுத்தி கரை வலை இழுப்பதனைத் தடை செய்ய வேண்டும் என பிரேரணையை முன் மொழிந்தார். (உ)

தனியார் வைத்தியசாலைக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்ப்பாணம் தனியார் வைத்தியசாலையில் செய்யப்பட்ட கண் புரைப் பாதிப்புக்கான சத்திரச்சிகிச்சையால் தனது உறவினரின் கண் மேலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது. கண் சத்திரசிகிச்சையால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் ஒருவரின் உறவினர் ஒருவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற அவர், தனது முறைப்பாட்டை வழங்கினார். இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்யப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

கஞ்சா வைத்திருந்த இருவருக்கு இருமாத சிறை

கொழும்பு, ஒக்.27

போதைப் பொருளான ஹெரோயினை வைத்திருந்த இளைஞர்கள் இருவருக்கு இரண்டு மாத சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாண நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் தீர்ப்பளித்தார்.

குற்றவாளிகள் இருவரும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும் எனவும் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது. யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் அதனை அண்டிய ஓட்டுமடம் பகுதியிலும் ஹெரோயினை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் அவர்களுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போது அவர்கள் இருவரும் தமது குற்றத்தை மன்றில் ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து நீதிவான் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (உ)

தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியோரில் ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்க மத்திய கல்வி அமைச்சால் அனுமதிக்கப்பட்ட 182 பேரின் நியமனத்தை இந்த மாத இறுதிக்குள் வழங்க வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என தொண்டராசிரியர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். வடமாகாண சபை அமர்வு நேற்று வியாழக் கிழமை நடைபெற்றுக்கொண்டிருந்த போது, நேர்முகத் தேர்வில் தோற்றி ஆசிரிய நியமனத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 182 தொண்டராசிரியர்கள் தமக்கான நியமனத்தை வடமாகாண சபை உறுப்பினர்கள் தடுப்பதாக குற்றஞ்சாட்டி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.தொண்டராசியர்களுக்கான நேர்முகத் தேர்வில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட போதிலும் 182 பேரை மத்திய கல்வி அமைச்சு தெரிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

இன்று நாளும் கோளும்

27.10.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 10 ஆம் நாள்

ஸப்தமி பகல் 11.28 வரை | உத்தராடம் பகல் 01.01 மணி வரை | மரணயோகம்

இராகுகாலம் 10.30 – 12.00 | சுபநேரம் 09.15 – 10.15 | எமகண்டம் 03.00 – 04.30

மேஷம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்	சிம்மம்	கன்னி	துலாம்	விருச்சிகம்	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்
சாந்தம்	விருத்தி	ஜெயம்	இலாபம்	உயர்வு	முயற்சி	யோகம்	பரிவு	ஊக்கம்	நன்மை	நட்பு	வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டார் பாடசாலைக்கு மைத்திரி விஜயம்

இரண்டு நாள் அரச முறை பயணம் மேற்கொண்டு கட்டார் சென்றுள்ள ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன டோஹா நகரில் உள்ள ஸ்டாவோட் பாடசாலைக்கு விஜயம் செய்துள்ளார்.

இரண்டாயிரமாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்டாவோட் இலங்கை பாடசாலையில் ஆரம்ப வகுப்பு முதல் உயர் வகுப்பு வரை சுமார் 1300 மாணவ மாணவியர்கள் கல்வி கற்கின்றனர். பாடசாலைக்கு நேற்று பிற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதியை மாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அறிவும் பண்பாடும் கொண்ட மாணவர் தலைமுறையை உருவாக்குவதில் ஸ்டாவோட் ஸ்ரீலங்கன் பாடசாலை மேற்கொண்டு வரும் பணிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, உலகில் எங்கிருந்தாலும் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை பெற்றுக்கொடுப்பது அனைவரதும் பொறுப்பாகும் என்று குறிப்பிட்டார். (உ)

பொறுப்பில்லாப் பரியாரியள்

வழமையாப் போறது போலை காலமை தம்பிமுத்தர் வீட்டை பால் வாங்கப் போனன். தம்பிமுத்தர் பெண்சாதி அவையின்ரை வீட்டு நடு ஹோலுக்கை தலை விரி கோலமா நிண்டு சன்னதமாடிக்கொண்டு நிண்டா. தம்பிமுத்தர் அதைப் பாத்துக்கொண்டு தலையிலை கை வைச்சபடி சாய்மனைக் கதிரையிலை குத்திட்டு இருந்தவர். நான் போனதைக் காணேல்லை. கொஞ்ச நேரம் அப்பிடியே பாத்துக் கொண்டு நிண்டன்.

பெட்டைதான் ஒடி வந்து "மாமா இண்டைக்குப் பால் கறக்கக் கொஞ்சம் சுணங்கும்" எண்டாள். எனக்கொண்டும் விளங்கேல்லை. "ஏனெடி மேனை?" எண்டு கேட்டன்.

"அம்மாக்குக் கண்ணிலை சதை வளந்திருக்கெண்ட சொல்லி நாளைக்கு விடியக்காலமை 5 மணிக்கு ஒப்பிரேசனுக்கு வரச் சொன்னவை.

–கண் சத்திர சிகிச்சை செய்த 9 பேருக்குக் கிருமித் தொற்று – எண்டு பேப்பரிலை பாத்தவவாம். மாட்டன் எண்டு ஐயாவோடை சண்டைப் பிடிச்சுக் கொண்டு நிக்கிறா. என்ன செய்யிறதெண்டுதான் தெரியேல்லை" எண்டாள் அவள்.

"ஒண்டோடை ஒண்டைக் குழப்ப வேண்டாம் எண்டு கொம்மாட்டைச் சொல்லு. அது நடந்தது தனியாற்றை ஆஸ்பத்திரியிலையாம். எங்கடை பெரியாஸ்பத்திரியிலை அப்பிடி ஒண்டும் நடக்கவிடாங்கள் எண்டு சொல்லு. தைரிய மாப் போகச் சொல்லு" எண்டு சொல்லிப் போட்டு வந்திட்டன்.

இஞ்சை பாருங்கோ. வைத்தியம் எண்டதும் கோயிலுக்குப் போற மாதிரி. அதுகும் ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்கை விட்டுப் போனால் வைத்தியம் பலிக்காதெண்டு அந்தக் காலத்திலை பரியாரியார் பரமர் சொல்லுறவர். அது உண்மை தான். இதை ஏன் எங்கடை டாக்குத்தர்மார் விளங்கிக் கொள்ளினமில்லை. ஒரே நேரத்திலை 10–15 பேரை வரச்சொல்லி கோஷ்டி கானம் வாசிக்கிற மாதிரி கண்வைத்தியத்தைச் செய்யப் பழகீட்டினம். ஏனெண்டால் ஒரு இடத்திலை முடிச்சிட்டு அடுத்த இடத்துக்கு ஓட வேணும். என்னத்துக்கு உப்பிடி அவாப் பட்டு உழைக்கினமோ தெரியேல்லை? அவை தங்களுக்கும் குழந்தை குட்டி இருக்கெண்டு நினைக்கிறேல்லை! உப்பிடி அநியாயமா உழைக்கிறது எங்கை சுவறப் போகுது.

அண்டைக்குக் கிருமி தொத்தினதுக்கு முழுக்க முழுக்க முதல் டொக்டரும், பிறகு ஆஸ்பத்திரியுந்தான் பொறுப்பு. டொக்டர் பொறுப்பா இருந்தா உதொண்டும் நடக்காது.

அரசாங்கம் உவயளை ஐஞ்சு சதம் வாங்காமல் படிப்பிக்கிது. ஏனெண்டால் மக்களுக்கு வைத்தியம் முக்கிய சேவை எண்டபடியால்தான். அதை விளங்காமல் படிச்சு முடிச்ச உடனை வேலை தரவேணுமெண்டு அரசாங்கத்தோடை சண்டை. பிறகு வேலையைக் காட்டி எங்கையேன் பசை உள்ள இடத்திலை கலியாணம். பிறகு வரி இல்லாமல் கார் பொமிட். பிறகு ஸ்பெசல் பண்ண எண்டு வெளிநாடு. பிறகு திரும்பி வந்து காவாசி நேரம் அரசாங்க ஆஸ்பத்திரியிலை. அதாவது ஏழை எழியதுக்கு வேலை. முக்காவாசி நேரம் ஆத்துப் பறந்து தனியாற்றை ஆஸ்பத்திரியளிலை தான் அவையளைக் காணலாம். ஏன்? அங்கைதானே காசு!

உந்த சைட்டத்துக்கு எதிராக் கொடி பிடிக்கிற கிறவுட்டுக்கு ஒண்டைச் சொல்ல வேணும். தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக் கொடி பிடிக்கிற நீங்கள், முள்ளெலும்பிருந்தாத் தனியார் ஆஸ்பத்திருக்கு எதிராகவும் கொடி பிடியுங்கோ பாப்பம்.பிடிக்க மாட்டியள். ஏன் எண்டால் உங்கடை ராக்கெட்டும் அதுதானே!

இப்ப என்ன நடந்திருக்கு? தனியார் ஆஸ்பத்திரி விட்ட பிழையை றிப்பியர் பண்ணப் பெரியாஸ்பத்திரியிலைதானே ஆக்களைப் போட்டுக் கிடக்கு...!!

- வில்லங்கம் விநாசி

சின்னையாவுக்கு அட்மிரல் பட்டம்

ஓய்வுபெற்ற கடற்படை தளபதி ட்ரவிஸ் சின்னையா அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியும் முப்படைகளின் தளபதியுமான மைத்திரிபால சிறிசேன இந்த பதவி உயர்வை வழங்கியுள்ளார். இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"முப்பத்தைந்து வருட காலம் கடற்படையில் அளப்பெரிய சேவைகளைப் புரிந்துள்ள இவர் இலங்கை கடற்படையில் 1982ஆம் ஆண்டு கெடற்சேவை அதிகாரியாக கடற்படையில்இணைந்துகொண்டார். தமிழர் ஒருவர் கடற்படையின் உயரிய பதவியை வகித்தமை இதுவே முதற்றடவை" - என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

மழை நீடிக்கும்

வடக்கு மாகாணத்தில் அண்மைய நாட்களாக நண்பகல் வேளைகளில் மழை பெய்துவருகின்றது. இந்நிலை நீடிக்கும் எனக் குறிப்பிட்டுள்ள வளிமண்டவியல் திணைக்களம் நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் பிற்பகல் வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் அதிகம் என்றும் அறிவித்துள்ளது.

இடைபருவ பெயர்ச்சி மழை ஆரம்பமாகின்றமையே இதற்கான காரணமாகும். சில இடங்களில் குறிப்பாக மத்திய, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் வவுனியா மாவட்டத்திலும் சுமார் 100 மில்லிமீற்றருக்கு மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும். நாட்டின் பெரும்பாலான இடங்களில் பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். மேல் மாகாணம், புத்தள மாவட்டம் மற்றும் கிழக்கு, தெற்கு மாகாணங்களின் கடற்கரையோரங்களிலும் காலைவேளைகளில் ஓரளவு மழை பெய்யும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.(உ)

வெள்ளைவான் கலாசாரத்தின் ஸ்தாபகர் கோத்தாவே

வெள்ளைவான் கலாசாரத்தின் ஸ்தாபகராக கோத்தபாய ராஜபக்ச திகழ்கிறார் எனக் குறிப்பிட்டுள்ள நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, கோத்தபாய ராஜபக்சவின் எதிர்கால அரசியல் நோக்கங்களுக்காக தொடங்கப்பட்ட 'வியக்மக' என்ற இயக்கம் விபத்துக்கான மார்க்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர்,

"கோத்தபாயவின் ஒடுக்கு முறை குறித்த எல்லையில்லாக் கனவுகள் இன்னமும் கலையவில்லை. சமகால அரசாங்கத்தின் வெற்றிகரமான முன்னேற்றத்தை சகிக்க முடியாத சக்திகள் விரக்தியின் விளிம்பில் ஆவேசம் கொண்டுள்ளனர். சமகால அரசாங்கத்தை ஆட்சிபீடத்தில் அமர்த்துவதற்கு பெரும்பாலான மக்கள் வாக்களித்தார்கள். அந்த மக்கள் ஆணையை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. சமகால அரசாங்கத்தின் தலைவர்கள் இருவரும் நாட்டின் நம்பிக்கையை வென்றுள்ளார்கள். சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையும் அவர்களுக்கு உண்டு. இருவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் வழங்கப்பட்ட திட்டங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (உ)

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம்

வெள்ளப்பெருக்கு அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்காக நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன. மண்சரிவு அபாயமுள்ள வலயங்களில் வாழும் பாதிக்கப்படுகின்ற 5 மாவட்டங்களில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்த வேண்டுமென தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆலோசனை கூறியிருந்தது. இந்த நிறுவனம் இனங்கண்ட 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்கும் திட்டம் அமுலாக்கப்படவுள்ளது. இதற்காக அமைச்சரவையில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (உ)

சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களை கருத்தில் கொண்டு சிகிச்சை மற்றும் உபகரண சேவைகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

உரிய காரணம், அடையாளம் காணப்படாத சிறுநீரக நோய் இலங்கையில் 11 மாவட்டங்களில் 60 பிரதேச செயலக பிரிவுகளிலும் காணப்படுகின்றது. ஏனைய பிரதேசங்களிலும் இது பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இது மிகவும் பாரிய சமூக பிரச்சினையாக அமைந்துள்ளது. இதனால் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் தொற்றா நோயான சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனை கருத்தில் கொண்டு சிறப்பு வசதிகளை கொண்ட சிகிச்சை சேவை ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கென 462.5 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் 3 திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“துறைமுக நகரத்திட்டம்” 50 வீத நிலமீட்பு பூர்த்தி

கொழும்பு, ஒக். 27

கொழும்பு துறைமுக நகரத்தை அமைப்பதற்கான நிலத்தை உருவாக்கும் பணிகள் பாதிக்கட்டத்தை தாண்டியுள்ளதாகவும், நிலத்தை உருவாக்கும் பணிகள் 2019ஆம் ஆண்டு நிறைவடையும் என்றும் மேல்மாகாண அபிவிருத்தி மற்றும் பெருநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுக நகர உருவாக்கப் பணிகளை நேற்று முன்தினம் பார்வையிட்ட பின்னரே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீன முதலீட்டில் உருவாக்கப்படவுள்ள துறைமுக நகரத்துக்கான, 269 ஹெக்ரெயர் நிலத்தை உருவாக்கும் பணிகளில் 50 வீதம் நிறைவடைந்துள்ளது. இதுவரை 134.5 ஹெக்ரெயர் நிலம் கடலில் இருந்து மீட்கப் பட்டுள்ளது. நிலத்தை உருவாக்கும், இந்த திட்டத்தின் முதற்கட்டத்தை நிறை வேற்றும் பணிகள் 2019ஆம் ஆண்டு நிறைவடையும். நிலத்தை உருவாக்கும் பணிகள் நிறைவடைந்ததும், ஜனாதி பதி, துறைமுக நகரப் பிரதேசத்தை நாட் டின் நிலப்பிரதேசமாக பிரகடனம் செய்வார். சட்டபூர்வமாக நாட்டின் வரைபடத்திலும் உள்ளடக்கப்படும். அதன்பின்னர் கட்டுமானப்பணிகளுக்கான அனுமதி அளிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

அந்த நாள் ஞாபகம்.....!

27.10.1975

விடுதலைப் புலிகளின் முதலாவது ஆயுதத் தாக்குதல் நடத்தப் பட்டது. யாழ்ப்பாணம் மாநகரத் தலைவர் அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார்.

‘உணவு உற்பத்தி வருடமாக’ 2018 பிரகடனம்

கொழும்பு, ஒக். 27

2018ஆம் ஆண்டினை “உணவு உற்பத்தி வருடமாக“ பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உணவு உற்பத்தி தொடர்பிலான கொள்கை மற்றும் திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி 2018ஆம் ஆண்டினை உணவு உற்பத்தி வருடமாகப் பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அரச தரப்பினர், தனியார் பிரிவினர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் இணை பங்குபற்றலுடன் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (உ)

விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஒக். 27

நீர்கொழும்பு - கொழும்பு பிரதான வீதியில் சோபனி சந்திப்பகுதியில் நேற்று மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார். லொறியை முந்திச் செல்ல முயன்ற போது மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதியுள்ளது.

இதன்போது குறித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த நபர் வீதியில் விழுந்துள்ளார். இந்த நிலையில் லொறி அவர் மீது ஏறிச் சென்றுள்ளது.

குறித்த நபர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். உயிரிழந்தவர் பமுனுகம நுககே கொட்டுவ பிரதேசத்தை சேர்ந்த 54 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது. இதேவேளை சம்பவம் தொடர்பாக லொறி சாரதியை ஜா-எல பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ)

தமிழக மீனவர்கள் ஐவர் கடற்படையால் கைது

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் ஐவரை இலங்கை கடற்படையினர் நேற்று படகுடன் கைதுசெய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம், ஜெகதாபட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தினமும் 500இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்று வருகினறனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மீன்துறை அலுவலக அனுமதியுடன் கோட்டைப்பட்டினத்தை சேர்ந்த 160 விசைப் படகுகளில் சுமார் 700க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குள் சென்றனர்.

அவர்கள் நேற்று அதிகாலை நெடுந்தீவு அருகே வலைகளை விரித்து மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், ஜோன்பீட்டர் என்பவருக்கு சொந்தமான விசைப்படகினை சுற்றி வளைத்தனர். பின்னர் அந்த படகில் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த விலை உயர்ந்த இறால் உள்ளிட்ட மீன்களை கைப்பற்றியதோடு மீனவர்கள் இன்னாசி (வயது 40), ஜெமினி (42), கருப்பசாமி (47), பூமி (52), சுதாகர் (19) ஆகிய ஐந்து மீனவர்களையும் கைது செய்துள்ளனர். (உ)

கொழும்பை நெருங்கும் ஒன்பது போர்க்கப்பல்கள்

கொழும்பு, ஒக். 27

இலங்கையின் கடற்பிராந்தியத்துக்கு அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் 9 போர்க் கப்பல்கள் வருகை தரவுள்ளனவெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் முதற்கட்டமாக பங்களாதேஷ் நாட்டுக்குச் சொந்தமான “சமுத்திரா அவஜன” என்ற போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்தது. தென்கொரிய போர்க் கப்பல்கள் இரண்டு, கொழும்புத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்தன.

இதனைத் தொடர்ந்து இந்தோனேஷியா, தென்கொரியா, பங்களாதேஷ், இந்தியா, சீனா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் இந்தியப் போர்க் கப்பல் எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதியும், இந்தோனேஷியாவுக்குச் சொந்தமான போர்க் கப்பல் 4ஆம் திகதியும், பாகிஸ்தானுக்குச் சொந்தமான போர்க் கப்பல் 7ஆம் திகதியும், சீன போர்க் கப்பல் 10ஆம் திகதியும் வருகைதர வுள்ளதாக அறியமுடிகின்றது. (உ)

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 1131 பேர் மீளிணைவு

கொழும்பு, ஒக். 27

இராணுவத்திலிருந்து தப்பியோடி தலைமறைவாகியிருப்போரில் 1,131 பேர் கடந்த இரண்டு நாட்களில் மீண்டும் பணியில் இணைந்துகொண்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது, ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளித்த அவர்,

“இராணுவத்தின் 68ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கடந்த 23ஆம் திகதி பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டது. அக்காலம் நவம்பர் 15 வரை அமுலில் இருக்கும்.

இதேவேளை, சுமார் 30 ஆயிரம் இராணுவத்தினர் கடமைக்கு சமுகமளிக்காமலும் அறிவிக்காமலும் உள்ளனர்” - என்றார். (உ)

சட்டவிரோத 1164 ஆயுதங்கள் 20 மாதங்களில் மீட்பு

கொழும்பு, ஒக். 27

சட்டவிரோதமான ஆயுதங்களைக் கைப்பற்றும் வகையில் கடந்த 20 மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 1,164 ஆயுதங்களும் 3,548 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையிலும் முன்னெடுக்கப்பட்டன. 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் வரையிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 437 ஆயுதங்களும் 547 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் வரையிலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் 637 ஆயுதங்களும் 3,001 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

வெலிக்கடைச் சிறைச்சாலை சம்பவத்துக்கு நட்டஈடு

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி இடம் பெற்ற சம்பவத்தினால் உயிரிழந்த மற்றும் காயங்களுக்கு உள்ளானவர்களுக்கு 9 மில்லியன் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்ற மற்றும் இந்தமத அலுவல்கள் அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் தலைமையில் இது தொடர்பான நிகழ்வு இடம் பெற்றது. நஷ்டஈடு வழங்கும் 2ஆம் கட்ட நிகழ்வின் கீழ் இந்த சம்பவத்தினால் உயிரிழந்தவர்களுக்காக அவர்களை சார்ந்த உறவினர் 4 பேருக்கு 20 இலட்சம் ரூபா வீதம் நஷ்டஈடு அமைச்சரினால் வழங்கப்பட்டுள்ளது. (உ)

தேர்தல் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை

2017ம் ஆண்டு 16ம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் (திருத்தச்) சட்டம் தொடர்பிலும் அதன் மூலம் [illegible] வத்தை உறுதி செய்வது தொடர்பிலும் விளக்கமளிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டத்தினை செயற்படுத்த தேசிய கொள்கை கள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கென பிரதமர் ரணில் விக்ரமசிங்க, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசல் முஸ்தபா, மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சர் சந்திராணி பண்டார ஆகியோர் இணைந்து முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பல்கலை மாணவர்களின் போராட்டம் தொடரும்

யாழ்ப்பாணம், ஒக்.27

"அனுராதபுரம் சிறைச்சாலையில் தொடர் உண்ணாவிரதமிருந்து வரும் மூன்று அரசியல் கைதிகள் தொடர்பாக நாம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அரசாங்கத்தால் நிறைவேற்றப்படும் வரை யாழ்.பல்கலைக் கழக மாணவர்களின் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் தொடரும்"என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கே. கிருஸ்ணமீனன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் கருத்து தெரிவிக்கையில்,

"அனுராதபுரம் விசேட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ள மூன்று அரசியல் கைதிகளினதும் வழக்குகளை மீளவும் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும், ஏனைய கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூடங்களிலிருந்து பிரித்து அரசியல் கைதிகளைத் தனியான சிறைக் கூடங்களில் அனுமதிக்க வேண்டும் ஆகிய இரு முக்கிய கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென அரசைக் கேட்டுள்ளோம்.

ஆனால், இதுவரை நாங்கள் முன்வைத்துள்ள இரு கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான உத்தரவாதம் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் நாங்கள் எங்கள் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதெனத்தீர்மானித்துள்ளோம் " என்று குறிப்பிட்டுள்ளார். (ஆ)

பிள்ளையானுக்கு குற்றப் பத்திரிகை

மட்டக்களப்பு, ஒக்.27

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவ நேசத்துரை சந்திரகாந்தனுக்கும் (பிள்ளையான்) ஏனைய 6 பேருக்கு எதிராகவும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமாகவுள்ளது. பிள்ளையான் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையின் போதே உயர்நீதிமன்றத்தில் இந்த விடயம் நேற்றுத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பில் பிள்ளையான் 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். இதுவரை அவர் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் 31 தடவைகள் ஆஜர் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

மகாநாயக்கர்களின் எதிர்ப்பு ஏமாற்றுவேலை

கொழும்பு, ஒக்.27

" புதிய அரசியலமைப்பு தேவையில்லை என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் மகாநாயக்க தேரர்களின் செயற்குழு விடுத்த அறிவிப்புக்குப் பின்னால் ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரல் இருக்கிறது" என்று புதிய அரசியலமைப்பு தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

மகாநாயக்க தேரர்கள் செயற்குழுவில் 40 பேர் இருக்கின்ற போதிலும் அதில் 9 பேர் கூடியுள்ளனர். அதே போன்று சட்டத்தரணிகள் சங்கத்தில் 950 பேர் இருக்கின்ற போதிலும் அதில் 46 பேரே கூடித்தான் இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தனர். இந்த இருதரப்பினராலும் அறிவிப்பு மக்களை திசைதிருப்பும் நோக்குடனேயே வெளியிடப்பட்டுள்ளது. எனவே இதனை நியாயமான அறிவிப்பாக ஏற்றுக் கொள்ளவே முடியாது . எனவே இது ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இடம்பெற்றதென்பது தெளிவாகிறது.

எனவே மக்களுக்கு இது குறித்து நாங்கள் தெளிவு படுத்த வேண்டும். அதே வேளை மல்வத்த மற்றும் அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர்கள் எதிர்ப்பு என ஒருநாள் தெரிவித்தனர். மகாநாயக்க தேரர்களின் செயற்குழுவில் 40 பேர் இருக்கின்றனர். ஆனால் மாகாநாயக்க தேரர் வெளி நாட்டில் இருந்த தருணத்தில் 9 பேர் கூடியே அப்படியான தீர்மானத்தை அறிவித்தனர். வரலாற்றில் அரசியல் விவகாரப் பேச்சுக்காக மகாநாயக்க தேரர்களது செயற்குழு தலதா மாளிகையில் ஒருபோதும் கூடியதில்லை" என்றும் அவர் கூறினார். (அ)

தொடர்ச்சிகள்

வீட்டுத் திட்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு காரணங்களைக் காட்டி இறுக்கமான நிபந்தனைகளை அரச இயந்திரங்கள் மேற்கொள்வதாக தெரிவித்தே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

வட்டுவாகலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசி மூலமாக அழைப்பினை மேற்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் உரையாடியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நில அளவீட்டு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. அதனையடுத்து மக்களும் தமது மறியல் போரைக் கைவிட்டனர். ஆயினும் மீண்டும் நில அளவைப் பணிகள் நடந்தால், அதனைத் தடுத்தே தீருவோம் எனவும் மக்கள் தெரிவித்தனர். (ஆ)

வடக்கு - கிழக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த மதத்துக்கான முன்னுரிமை நீக்கப்படுதல், ஆளுநரின் அதிகாரித்தைப் பறித்தல், வடக்கு,கிழக்கு மாகாணங்களை இணைத்தல் என்பன குறித்து அதில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது " என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

"சட்டம் படியுங்கள்"....

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

108ஆவது அமர்வின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

"வடமாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும், இன்னமும் பல நியதிச் சட்டங்கள் உருவாக்கப்படவில்லை.

உறுப்பினர்கள் மாகாணச் சட்டங்களைக் கற்று தங்கள் அதிகாரம் என்ன, எல்லை என்ன என்பதை, முதலில் அறிய வேண்டும். அதன் பின்னர், அதற்குள் நின்று நியதிச் சட்டங்களை உருவாக்க வேண்டும்.

மற்றைய மாகாண நியதிச் சட்டங்களைப் பெற்று, அதனை எமது மாகாணத்துக்கு ஏற்றவாறு மாற்றி புதிய நியதிச் சட்டங்களை உருவாக்கலாம். அதனைக் கூடச் செய்யாது கால தாமதப்படுத்திக் கொண்டுதான் நாம் இருக்கிறோம்.

தகவலறியும் உரிமைச் சட்டம் மூலம் கேட்கப்படும் தகவலுக்கு பிழையான தகவல்களை அதிகாரிகள் தருகின்றனர். வடமாகாணத் திணைக்கள அதிகாரிகள், தமது சொந்தப் பாவனைக்காக திணைக்கள வாகனங்களைப் பயன்படுத்துகின்றார்கள். அது தொடர்பான தரவுகளையும் தகவல்களையும் பெற, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் குறித்த திணைக்களங்களைக் கேட்டபோது, அவர்கள் தவறான தகவல்களையே தருகின்றார்கள்" எனவும் அவர் தெரிவித்தார். (அ)

இன்னும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் தற்செயலாக தூக்கத்தில் இருந்து சிறுமியின் தந்தை விழித்ததால், கடத்தல்காரர்கள் தங்கள் முயற்சியைக் கைவிட்டு ஓடிவிட்டனர். இது குறித்து சிறுமியின் பெற்றோர் நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர். அதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கடத்தல்காரர்களின் செருப்பு, நைலோன் கயிறு உள்ளிட்ட தடயப் பொருட்களையும் கைப்பற்றினர். எனினும் இந்தச் சம்பவம் நடைபெற்று இருவாரங்கள் கடந்த பின்னரும் சந்தேகநபர்களைப் பொலிஸார் கண்டுபிடிக்க முடியாததால் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இரவு நேரத்தை அச்சத்துடனேயே கழிப்பதாகக் கூறப்படுகின்றது. (ஆ)

18 வருடங்களின்....

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவரது வழக்கு ஆரம்பத்தில் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த நிலையில் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. பதினெட்டு ஆண்டுகளாக எந்தவித விசாரணைகளுமின்றி சிறையில் அவர் அடைக்கப்பட்டிருந்த நிலையில் சிரேஷ்ட சட்டத்தரணி ரட்ணவேல் இவருக்காக வாதாடியிருந்தார். இந்த நிலையில் குறித்த வழக்கை விசாரணை செய்த கொழும்பு மேல் நீதிமன்றம், அவர் குற்றவாளி இல்லை எனத் தீர்ப்பளித்து விடுதலை செய்தது. (அ)

யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையாக மலேரியாக் காய்ச்சலை உண்டுபண்ணக்கூடிய அனோபிளிஸ் ஸ்ரெபன்சி என்னும் நுளம்பும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. எனவே மழைக்காலத்தில் மக்கள் இந்த நுளம்புகள் தொடர்பில் அவதானமாக இருந்தால் மட்டுமே மலேரியா, டெங்கு நோய்த் தாக்கங்களில் இருந்து தப்பிக்க முடியும்" என்று கூறியுள்ளார் வட மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் .

" யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயால் இதுவரை 2 மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்த நிலையில் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விசேடமாக வெளி மாவட்டங்களில் இருந்து சுகாதாரப் பணியாளர்கள் யாழ். மாவட்டத்தில் களமிறக்கப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

அதே சமயம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் மலேரியாக் காய்ச்சலைப் பரப்பும் அனோபிளிஸ் ஸ்ரெபன்சி என்ற நுளம்பும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. யாழ்.மாவட்டத்தில் முதலில் யாழ்.புகையிரத நிலைய பகுதியிலேயே இந்த நுளம்பு அடையாளம் காணப்பட்டது. அதனை தொடர்ந்து நல்லூர் பகுதிகளிலும் இந்த நுளம்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை எவருக்கும் மலேரியா நோய்த் தாக்கம் உண்டானமை கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த நிலையில் மழைக் காலம் ஆரம்பமாவதால் பொதுமக்கள் விழிப்பாகச் செயற்படவேண்டும். அதே சமயம் பொதுமக்களின் விழிப்பு ணர்வு இல்லாமல் டெங்கு காய்ச்சல் மற்றும் மலேரியா காய்ச்சல் போன்றவற்றைக் கட்டுப்படுத்த இயலாது. எனவே மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு நுளம்பைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும் " என அவர் மேலும் கேட்டுள்ளார். (ஆ)

முல்லைத்தீவில்....

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் நிலைகொண்டுள்ளனர். எனினும், கஞ்சா கடத்தல், திருட்டு சம்பவங்கள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. குறிப்பாக புதுக்குடியிருப்புப் பகுதியில் அண்மைக் காலமாக அதிக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதனால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். எனவே இந்த விடயம் தொடர்பாக மாகாண சபை அதிகவனமெடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராண்டின் பின் தாய்லாந்து மன்னருக்கு இறுதிச்சடங்கு

தாய்லாந்து,ஒக.27

ஓர் ஆண்டுக்கு முன்னர் மரணம் அடைந்த தாய்லாந்து மன்னர் பூமிபாலின் உடலுக்கு நேற்று இறுதிச் சடங்கு நடை பெற்றது. இதனையொட்டி அவரது இறுதிச் சடங்கில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

தாய்லாந்து மன்னராக 70 ஆண்டு காலம் இருந்த பூமிபால் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி மரணம டைந்தார். தொடர்ந்து ஓர் ஆண்டு காலம் அவரது உடல் பதப்படுத்தப் பட்டு வந்தது. பூமிபாலின் இறுதிச் சடங்கைத் தொடர்ந்து தாய்லாந்தில் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள் ளது. இந்த இறுதிச் சடங்கில் உலகெங் கிலும் உள்ள 40க்கும் மேற்பட்ட அர சுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு இந்த இறுதிச் சடங்கு நடைபெறவுள்ளது.

சிங்கப்பூரே சக்தி வாய்ந்தது

சிங்கப்பூர்,ஒக்.27

சர்வதேச ஆலோசனை நிறுவனமான ஆர்டான் கப்பிற்றல் என்ற நிறுவனம், உலக நாடுகளின் கடவுச்சீட்டுக்கள் குறித்த தர வரிசையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

விசா இன்றிப் பயணம் செய்ய அனுமதிப் பதன் அடிப்படையில் முதல் 10 இடங்க ளைப் பிடித்த உலகின் மிகவும் சக்திவாய்ந்த கடவுச்சீட்டுக்கள் குறித்த பட்டியலை வெளி யிட்டுள்ளது. அதில் சிங்கப்பூர் 159 புள்ளி களுடன் முதலிடம் பிடித்துள்ளது.

இந்த நாட்டின் கவுச்சீட்டின் மூலம் 159 நாடுகளுக்கு விசா இன்றிப் பயணம் மேற்கொள்ளலாம். அதற்கு அடுத்த இடத் தில் 158 புள்ளிகளுடன் ஜேர்மனி இரண் டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

அமெரிக்கா 154 புள்ளிகளுடன் 6ஆவது இடத்துக்குப் பின்தங்கி உள்ளது. இந்தி யக் கடவுச்சீட்டு 51 புள்ளிகளுடன் 75ஆவது இடத்தில் உள்ளது. (க)

ஷெரின் உடலை மறைத்துவைத்த தாய்

ஹூஸ்டன்,ஒக்.27

அமெரிக்காவில் இந்தியச் சிறுமி மரணத் தில் தனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை எனச் சிறுமியின் வளர்ப்புத் தாய் கூறியுள் ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் ரிச்சர்ட்சன் நகரில் வெஸ்லி மேத்யூஸ் என் பவர் தனது மனைவி மற்றும் இரண்டு மகள் களுடன் வசித்து வந்தார்.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த இவர்கள், அனாதை இல்லத்தில் இருந்து ஒரு குழந்தை யைத் தத்தெடுத்து வளர்ந்து வந்தனர். அந் தக் குழந்தை கடந்த 7ஆம் திகதி காணா மல் போனது. மேத்யூஸ் அளித்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேத்யூசுவின் வீட்டுக்கு அருகில் உள்ள கால்வாயில் இருந்து சிறுமி யின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

இதுகுறித்துத் தீவிர விசாரணை நடத் திய பொலிஸார், மேத்யூசைக் கைது செய்த னர். மேத்யூ கூறிய வாக்குமூலத்தில், 'ஷெரி னுக்கு இரவு பால் குடிக்கும் போது திடீ ரென அடைப்பு ஏற்பட்டது. அதனால் அவள் இறந்து விட்டாள். ஷெரின் உடலை நான் தான் வெளியே கொண்டு சென்று மறைத்து வைத்தேன்' எனக் கூறியுள்ளார். (க)

1000 கார்களை திருடிய வடகொரியா

வடகொரியா,ஒக.27

சுவீடன் நாட்டில் இருந்து 1000 கார் களை வாங்கிய வடகொரியா, 2.4 பில்லி யன் பவுண்ட் தொகையை செலுத்தாமல் பல ஆண்டுகளாக ஏமாற்றி வருவதாகத் தக வல் வெளியாகியுள்ளது.

சுவீடன் நாட்டில் இருந்து கடந்த 43 ஆண்டுகளுக்கு முன்னர் ஆயிரம் வால்வோ கார்களை வடகொரியா வாங்க முடிவு செய் துள்ளதுடன், அந்தக் கார்களைத் தங்கள் நாட்டுக்கு வரவழைத்துப் புறநகர் பகுதிக ளில் பேருந்துக்குப் பதிலாகப் பயன்படுத்த வும் செய்தது.

ஆனால் வாகனங்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் வடகொரியா செலுத்த வேண்டிய 555 மில்லியன்பவுண்ட் தொகையை சுவீடன் நாட்டுக்கு வழங்காமல் கால தாம தப்படுத்தி வந்துள்ளது. குறித்த தொகையை வடகொரியா இதுவரை செலுத்தவில்லை என்றும், அந்தத் தொகைக்கான வட்டியு டன் சேர்த்துத் தற்போது 2.4 பில்லியன் பவுண்ட் என எட்டியுள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது அமெரிக்கா, உள்ளிட்ட நாடுகளின் கடுமையான பொருளா தாரத் தடைகளால் தடுமாற்றம் கண்டிருக் கும் வடகொரியாவை, குறித்த சம்பவத்துக் குப் பின்னர் ஆண்டுக்கு இருமுறை சுவீடன் அரசு நினைவுப்படுத்தி வந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

நான்கு கதவுகள் கொண்ட வால்வோ 144 மொடல் கார்களைக் குறித்த நிறுவ னம் 1966 முதல் 1974 வரை உருவாக்கி வந்துள்ளது மட்டுமின்றி குறுகிய காலத்தில் 10 இலட்சம் கார்களை விற்பனை செய்து சாதித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க)

அமெரிக்கா குண்டு வீச்சில் 13 தீவிரவாதிகள் பலி!

ஏமன்,ஒக்.27

ஏமன் நாட்டில் ஆளில்லா விமானங்கள் மூலம் அமெரிக்கா நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 13 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல் லப்பட்டனர். அரபு நாடுகளான ஈராக், சிரி யாவில் பதுங்கி இருக்கும் ஐ.எஸ்.தீவிரவாதி கள் மீது அமெரிக்கா தொடர்ந்து குண்டு வீசித் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் பக்கத்து நாடுகள் சில வற்றிலும் ஐ.எஸ்.தீவிரவாதிகள் புகுந்து சில இடங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இதேபோல் ஏமன் நாட் டில் அல்பேதா மாகாணத்தின் சில பகுதி களை ஐ.எஸ்.தீவிரவாதிகள் கைப்பற்றி வைத்துள்ளனர். அந்த இடங்களில் அமெ ரிக்கா ஏற்கெனவே சில முறை தாக்குதல் நடத்தி உள்ளது.

கடந்த 16ஆம் திகதி ஐ.எஸ். தீவிரவாதி களின் முகாம்களில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் மீண்டும் அமெரிக்கா தாக்குதல் நடத்தி உள்ளது. (க)

நவாஸ் ஷெரீபை கைது செய்ய உத்தரவு

பாகிஸ்தான்,ஒக்.27

ஊழல் வழக்கில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபை கைது செய்ய நீதிமன் றம் ஆணை பிறப்பித்துள்ளது. பனாமா கேட் ஊழல் விவகாரத்தில், பாகிஸ்தானின் அப்போ தைய பிரதமர் நவாஸ் ஷெரீபை பதவி நீக்கம் செய்து, அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தர விட்டது.

இதையடுத்து, கடந்த ஜூலை மாதம் நவாஸ் பதவி விலகினார். அவர் மீதான ஊழல் வழக்குக ளைப் பாகிஸ்தான் தேசிய பொறுப்புடைமை நீதிமன்றம் விசாரித்து வருகிறது. நவாஸின் மனைவி குல்சூம் புற்றுநோயால் பாதிக்கப் பட்டுப் பிரிட்டன் தலைநகர் லண்டனில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு உதவி யாக, நவாஸும் அங்கேயே தங்கியுள்ளார். இந்த நிலையில், நவாஸ் ஷெரீப்புக்கு எதிரான இரண்டு ஊழல் வழக்குகளில் நீதிமன்றம் இன்று ஜாமீனில் வெளிவரக்கூடிய பிடியாணை பிறப்பித்தது. வழக்கு விசாரணையை தலைமை 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பரில் 'சத்யா'

சென்னை,ஒக்.27

பிரதீப் கிருஷ்ணமூர்த்தி இயக்கத்தில் சிபிராஜ் - ரம்யா நம்பீசன், வரலட்சுமி நடிப் பில் உருவாகி இருக்கும் 'சத்யா' படத்தின் ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

நாதாம்பாள் பிலிம் சார்பில் நடிகர் சத்ய ராஜ் தயாரித்து வரும் வரும் 'சத்யா'. இதனை 'சைத்தான்' பட இயக்குநர் பிரதீப் கிருஷ்ண மூர்த்தி இயக்கியுள்ளார்.

கிரைம் த்ரில்லர் பாணியில் உருவாகி இருக்கும் இப்படம், தெலுங்கில் வெளி யாகி பெரும் வரவேற்பைப் பெற்ற 'ஷணம்' படத்தின் ரீமேக் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்தில் வரலட்சுமி சரத்குமார் பொலிஸ் அதிகாரியாக நடித்துள்ளார். வரலட்சுமியின் கதாபாத்திரம் படத்துக் குப் பலம் சேர்க்கும் என்று கூறப்படுகிறது. சமீபத்தில் வெளியான 'சத்யா' படத்தின் ட்ரெய்லர் ரசிகர்களிடையே நல்ல வரவேற் பைப் பெற்றிருந்த நிலையில், படம் நவம் பர் 24 ஆம் திகதி வெளியாகும் என்று அறி விக்கப்பட்டுள்ளது. (க)

விஜய் படப் பணிகள் மும்முரம்

சென்னை,ஒக்.27

மெர்சல் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, விஜய் அடுத்ததாக முருக தாஸ் இயக்கத்தில் நடிக்க இருக்கும் படத் தின் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான முதற்கட்டப் பணிகள் மும் முரமாக நடைபெற்று வருகின்றன. இப்படத் தின் படப்பிடிப்பு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடங்க உள்ளது. தற்போது இந்தப் படத்துக்கு கிரீஸ் கங்காதரன் ஒளிப்பதிவு செய்ய இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கெனவே விஜய், முருகதாஸ் கூட்ட ணியில் வெளியான 'துப்பாக்கி, 'கத்தி' ஆகிய 2 படங்களுமே சூப்பர் ஹிட்டா னது. ஆகையால், இந்தப் படம் குறித்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்தே ரசி கர்களின் எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. இப்படத்தை 'சன் பிக்சர்ஸ்' நிறுவனம் மிகப் பிரம்மாண்டமாகத் தயாரிக்கவுள்ளது.

எதிரொலி
Ethiroli

அஞ்சினால் முடியாது

கொழும்பு, ஒக்.27

புதிய அரசியலமைப்பு குறித்து விமர்சனங்களை முன்வைக்க சகல தரப்பினருக்கும் இடமுள்ளது. சகல தரப்பின் கருத்துக்களையும் ஆராய்ந்தே புதிய அரசியலமைப்பினை உருவாக்க முடியும் .

ஆனால் விமர்சனங்களைக் கண்டு அஞ்சினால் புதிய அரசியல் அமைப்பினை உருவாக்க முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார். (அ)

நேற்றுமுதல் 'ஸ்மார்ட் ஐ.சி'

கொழும்பு, ஒக்.27

ஆட்பதிவுத் திணைக்களம் 45 வருடங்களின் பின்னர் புதிய தேசிய அடையாள அட்டையை நேற்று முதல் வழங்கத் தொடங்கியுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

"தற்போது 'ஸ்மார்ட் கார்ட்' தொழில்நுட்பத்துடனான அடையாள அட்டைகளை வழங்க ஆரம்பித்துள்ளோம். ஒவ்வொருவரினதும் உடல் சார்ந்த தகவல்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

ஏற்கனவே அடையாள அட்டைகளை வைத்திருப்பவர்கள் இந்த அடையாள அட்டையை உடனடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இல்லை " என்றும் அவர் கூறினார். (ஆ)



கடற்படைச் சிப்பாய் மர்ம மரணம்

திருகோணமலை, ஒக்.27

இரவு நித்திரைக்குச் சென்ற கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

திருகோணமலை சீனன்குடா , கிளப்பன்பேக் கடற்படை முகாமில் கடமையாற்றி வந்த வீ.எம்.புஷ்பகுமார என்ற 28 வயதான கடற்படைச் சிப்பாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தக் கடற்படைச் சிப்பாய் கொல்லப்பட்டாரா அல்லது தற்கொலை செய்துக்கொண்டாரா என்பதை அறிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய , அவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்டுள்ளது. (ஆ)

உங்கள் ஊரில் உங்கள் மொழியில் உருவாகி உலகத் திரையரங்குகளில் ஓடும் உங்கள் ஊரவனின் திரைப்படம்.
திரையரங்கம் வாடகைக்கு பெறப்பட்டு திரையிடப்படுவதால் குறிப்பிட்ட காட்சி குறிப்பிட்ட நாளில் மட்டுமே.. தவற விடாதீர்கள்.
இளந்தமிழ்
வெளியீடு
28,29 OCT 2017
யாழ்.ராஜா 2 திரையரங்கில்
Sat 3:00 PM
Sun 2:30 PM
4:30 PM
6:30 PM
10 பேருக்கு உம்மாண்டி இலவச நுழைவுச் சீட்டுக்கள்
செய்ய வேண்டியது இதுதான்
'UMMANDY Free ticket'
என ரைப் செய்து உங்கள் பெயர் முகவரியோடு 0776575907 இலக்கத்துக்கு எஸ்.எம்.எஸ். அனுப்புங்கள். 10 பேருக்கு இலவச நுழைவுச் சீட்டு வழங்கப்படும்.
மதிசுதாவின்
உம்மாண்டி
The Silent Ghost
Something is Better than Nothing
அச்சு ஊடக அனுசரணை
எதிரொலி Ethiroli
Written and Directed by MaThiSutha
Cast MaThiSutha, Tharsha, Logini, Priyatharsini, Luxman, Priyan, Kesavaraja, Thusikaran, Jasi, Aanantharany, Pranavajothy
Cinematography Mathuran, Sansigan Camera Tharsan, Sanjee, Sella Assistant Director Janakan, Sansigan
Editing & Color Mathuran VFX Rushanthan Music Shameel SFX Pathmayan Production Manager Shayan
Producer Mathisutha
Miraa
Pupeteer studios

மாவீரர் மயானத்துக்கு சுற்று மதில் அமைப்பு

முழங்காவில், ஒக்.27

முழங்காவில் துயிலுமில்லத்தை புனரமைப்புச் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் 20 இலட்சம் ரூபா வழங்கியுள்ளார்.

இந்நிதி, துயிலுமில்ல வளாகத்தின் சுற்று மதில் அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. தற்போது சுற்றுமதிலின் ஆரம்ப கட்ட வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

கடந்த 17ஆம் திகதி இதற்கான அத்திவாரக் கற்கள் நடப்பட்டு தற்போது கட்டுமான வேலைகள் மிகவும் வேகமாக இடம்பெற்று வருகின்றன.

இதன் கட்டுமானப் பணிகள் அடுத்த மாதம் மாவீரர் நாளுக்கிடையில் நிறைவு பெறும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. (ஆ)

இறக்குமதி மீனுக்குத் தடை

கொழும்பு, ஒக்.27

இலங்கையில் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளதால், மீன் இறக்குமதியை நிறுத்தப்படவுள்ளது. ஆயினும் இதனைச் சாட்டாக வைத்து மீன் விலையை அதிகரித்து விற்காமல், அவற்றின் விலையைக் குறைத்து பொதுமக்கள் நன்மை பெறும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மீன்பிடி துறை அமைச்சர் மஹிந்த அமரவீர விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 27.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.